



பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காததை கண்டித்து சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் சென்னை திருவான்மியூரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா கண்டன உரையாற்றினார். இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், என்.வி.என். கனிமொழி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ் அரவிந்த் ரமேஷ் பிரபாகராஜா, மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், மாவட்ட துணை செயலாளர்கள் பாலவாக்கம் தா.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன், பகுதி செயலாளர்கள் துரை. கபிலன், இரா. துரைராஜ், அரிமா சு.சேகர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

### மார்ச் – 1 கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாள் விழா!

## தாம்பரம் மாநகரம் முழுவதும் நல உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

### மாநகரக் கூட்டத்தில் தீர்மானம்! எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தாம்பரம், பிப்.19-

தாம்பரம் மாநகரம் திமுக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம். நேற்று முன்தினம் (17.2.2025) மாலை 4 மணி அளவில் குரோம்பேட்டை லட்சுமி ஆண்டாள் பேலஸில் மாநகர கழக அவை தலைவர் கோ.காமராஜ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்லாவரம் தெற்கு பகுதி கழக செயலாளர் இ.எஸ்.பெர்னாட் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். மாநகரக் கழக நிர்வாகிகள் மேயர் க.வசந்தகுமாரி பொன்.சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநகரக் கழக செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ வருகின்ற மார்ச் ஒன்றாம் நாள் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை மாநகர முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடி மகிழ்ந்திட அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும் மாவட்ட துணை செயலாளர் பல்லவபுரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி. தலைமைசெயற்குழு உறுப்பினர் ஆதிமாறன். பொதுக்குழு உறுப்பினர்கள் மு.ரஞ்சன் ஆர்.எஸ். சங்கர் க.தேவேந்திரன் மாவட்ட கழகப் பிரதிநிதிகள் க.ரமேஷ் கே.தனசேகர் பா.டில்லி மண்டலக் குழு தலைவர்கள் பகுதி கழக செயலாளர் டி..காமராஜ், எஸ்.இந்திரன், இ. ஜோசப், அண்ணாதுரை, வே.கருணாநிதி, எஸ். சேகர், த.ஜெயக்குமார், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், வட்டக், கழக, செயலாளர், பா.அன்பழகன், க. மோகன், மு.நி.தமிழ், குமரன், வி.எஸ்.ஜெகநாதன், மு.இன்ப, சேகரன், என். காந்தி, தே.இளங்கோவன், எச்.முகமது, அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதரன், பே.பரமசிவம், டி. ராஜ்குமார், டி.வி.ராஜேந்திரன், எம்.அந்தோணி, டி.எச்.பிரான்சிஸ், பால், வி.என்.சிலம்பரசன், மா.முருகையன், பா.வெங்கடேசன், எம்.நாகராஜன், ஏ.ரங்கநாதன், ஆர். கே.நாகராஜன், எம்.சார்லஸ், கா.முஜிபுர், ரஹ்மான், டி.கன்னியப்பன், ப.ஆண்டவன், ஏ.பாலாஜி, மு. ஜோசப், இ.கமலக்கண்ணன், மு.வினோத், ஆர். ராதா, கிருஷ்ணன், வி.சந்திரசேகர், ச.ராஜா, கண்ணன், லோ, தனவந்தன், ஆர்.சதீஷ்குமார், இரா. ராஜா, எம்.சி, எம்.சீனிவாச, குமார், கே.முருகன், வி.முனுசாமி, ஆர்.ஜீவன், ஜி.ஸ்ரீதர், குமார், எம்.விஜயன், டி.ஆர்.கோபி, க.குருநாதன், பி.புகழேந்தி, பி.சுரேஷ், எஸ்.ஐசக், கே.வெங்கடேசன், ஆர். சஞ்சீவி, கு..பிரபாகரன், கே.ரமேஷ், பாபு, எம்.சாந்தகுமார், எம்.பெருமாள், இ.சாம்சங், எம்.கே.மோகனரங்கம்,

மாமன்ற உறுப்பினர்கள் ஏ.மதினா பேகம் சத்யாமதியழகன் எஸ். நெடுஞ்செழியன் சசிகலா கார்த்திக் லிங்கேஸ்வரி பாபு எல்.பெரியநாயகம் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் பி.கே. சத்ய பிரபு ரமணி ஆதிமூலம் மலர் மு.கருணாநிதி இ. மனோகரன் கி.முத்து மாறன் இரா.ரத்னகுமார் தி.சா.நடராஜன் டைகர் எஸ்.சிவா டி.கே.தாமஸ் ர.அகஸ்டின் டி.கோட்டி எம்.டி.விஜயகுமார் எம்.ஐ.டி.விஜய் ஆகியோர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் மாநகரில் உள்ள முதியோர் இல்லங்கள் ஆதரவற்றோர் நிலையங்களில் உணவு மற்றும் உபகரண உதவிகள் செய்திடவும். எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவரின் 200 தொகுதிகள் இலக்கு என்ற பாதையில் பயணிக்க வாக்காளர் பட்டியல் சரிபார்த்து வாக்காளர் சேர்த்தல் நீக்கல் போன்றவற்றின் முழுமூச்சாக பாக நிலை முகவர்கள் ஈடுபட்டிட முடிவெடுக்கப்பட்டது.

தாம்பரம் மாநகரில் மார்ச் 1 கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாநகரில் உள்ள பகுதி வட்டங்களில் காலை 8 மணி அளவில் ஒலி ஒளி அமைத்து கழக கொடியினை ஏற்றி வைத்து காலை சிற்றுண்டி மற்றும் கழகத் தோழர்களுக்கும் பொது மக்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கிட தீர்மானிக்கப்பட்டது.

கழக அரசின் சாதனைகளை விளக்கி பகுதி வட்டங்கள் தோறும் தெருமுனை கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

## சேப்பாக்கம் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் அறிவிப்பு!

சென்னை, பிப். 19-

சென்னை மேற்கு மாவட்டம், 9வது மண்டலக் குழுத் தலைவரும், சேப்பாக்கம் பகுதி செயலாளருமான எஸ். மதன் மோகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இன்று (19.2.2025 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் எண் 2/35, கிருஷ்ணப்ப தெரு சிந்தாதிரிப்பேட்டை பகுதி கழக அலுவலகத்தில் சேப்பாக்கம் பகுதி வட்ட கழக செயலாளர்கள் கூட்டம் பகுதி அவைத்தலைவர் மிக்ஸி அலீஃப் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சேப்பாக்கம் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் குட்பட்ட அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் மற்றும் பகுதி அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1 கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



ஆலந்தூர் வடக்கு பகுதி தி.மு.க.செயற்குழு கூட்டம் திங்கட்கிழமை மாலை, ஆலந்தூர் கற்பக விநாயகர் கோவில் மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் வே.டில்லிபாபு தலைமையில்,பகுதி நிர்வாகிகளான கோ.கோட்டீஸ்வரன்,ஐ.அழகேசன்,ஜெயாசெல்வம், எம்.சையத் அபுதாகீர் ஆகியோர் வரவேற்பில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ஆலந்தூர்.ப.குணாளன் ஆலோசனையுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதிவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள்(BLA–2), கழகத் தோழர்கள், அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்கள்



தாம்பரம் மாநகர திமுக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் லட்சுமி ஆண்டாள் திருமண மண்டபத்தில் மாநகரக் கழக அவைத் தலைவரும் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் தலைமையில் மாநகர கழக நிர்வாகிகள் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா. எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி மண்டல குழு தலைவர்கள் ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி டி.காமராஜ், எஸ்.இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர் உடன் பகுதி கழக செயலாளர்கள்,வட்ட செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மாநகர அணைகளின் அமைப்பாளர்கள், மற்றும் கழகத் தோழர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### பகுதிச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் வரவேற்புரை!

## பம்மல் வடக்கு பகுதிச் செயல்வீரர்கள் கூட்டம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

### இ.கருணாநிதி – எஸ்.ஆர்.ராஜா – வசந்தகுமாரி – கோ.காமராஜ் – வே.கருணாநிதி பங்கேற்பு!

காஞ்சிபுரம், பிப். 19 -

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நாளை (20.2.2025, வியாழக்கிழமை) மாலை 5.30 மணியளவில் பம்மல் எஸ்.எஸ்.மஹாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமை வகிக்கிறார். எஸ்.கே.நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, மு.நித்யானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பம்மல் வடக்கு பகுதி தி.மு.க செயலாளர் திருநீர்மலைத.ஜெயகுமார் வரவேற்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், வே.கருணாநிதி, அ. தமிழ்மாறன், இரா.நரேஷ் கண்ணா, கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல். பிரபு, வி.ரவிச்சந்திரன், சத்தியபிரபு, ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ. பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் பம்மல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட மாநகர பகுதி வட்டக் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி தகவல் தொழில்நுட்ப அணி உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

ச.பிரபு, ஞா.பிரபு, ஏ.செந்தில்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

